**செய்தி வெளியீடு எண்: 611** **நாள்: 13.102012**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.10.2012 அன்று தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறையில் தினக்கூலி அடிப்படையில் பத்து ஆண்டுகள் பணி நிறைவு செய்த 222 பணியாளர்களுக்கு பணிவரன்முறை ஆணைகளை வழங்கினார்கள்.

பொதுப் பணித் துறையில் தினக்கூலி அடிப்படையில் பணியில் சேர்ந்து பத்து ஆண்டுகள் பணி நிறைவு செய்து, தொடர்ந்து பணிபுரிந்து வரும், 39 உதவியாள், 159 பாசன உதவியாளர், 24 பணி ஆய்வாளர், என மொத்தம் 222 பணியாளர்களுக்கு பணி வரன்முறை ஆணைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 12.10.2012 அன்று வழங்கினார்கள். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றிற்கு சுமார் 3 கோடியே 26 லட்சம் ரூபாய் செலவினம் ஏற்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து பணி வரன்முறை ஆணைகளைப் பெற்றுக் கொண்ட பொதுப்பணித்துறை பணியாளர்கள் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், பொதுப்பணித் துறைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 13.10.2012